# 7. உவமையியல்

## ஒப்புமைப் பொதுப் பண்புகள்

**1222. வினை பயன் மெய் உரு என்ற நான்கே**
**வகைபெற வந்த உவமத் தோற்றம்.**

உவமைக்கும் (உவமிக்கப்படும்) பொருளுக்கும் சில பொதுத் தன்மைகள் இருந்தால்தான், ஒன்றை மற்றதனோடு உவமிக்க முடியும். அப்பொதுமைகள் நான்காகும்.

| | | |
|---|---|---|
| வினை | - | (செயல்) குயில் போலப் பாடினாள். |
| பயன் | - | பேரறிவாளன் செல்வம் ஊருணி நீர் நிறைந்தது போன்றது. |
| மெய் | - | தாமரை போன்ற முகம். |
| உரு | - | பால் போலும் வெண்ணிலா (நிறம்) |

இப் பொதுமைகளாலேயே உவமைகள் தோன்றுகின்றன. அதனால் இவை வினையுவமம், பயனுவமம், மெய்யுவமம், உருவுவமம் என் நான்கு வகைப்படும்.

## பொதுப்பண்புகள் விரவியும் வருதல்

**1223. விரவியும் வருஉம் மரபின என்ப.**

இப்பொதுமைகள் ஒன்றற்கு ஒன்றே வருமென்பது இல்லை; கலந்தும் வரும்.

பிறைபோலும் நெற்றி - வடிவமும் நிறமும் பொதுமைகள். கயல் போலும் கண்கள் - வடிவமும் பிறழ்தலும் பொதுமைகள்.

## உயர்ந்தவையே உவமையாக வரும்

**1224. உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை.**

இப் பொதுமை பற்றி உவமை கூறும்போது, உவமையாக வருவது அப்பொதுமைப் பண்பில் உயர்ந்ததாக இருக்க வேண்டும். வினை, பயன், மெய், உரு எனும் பொதுமையில் அவை சிறந்தவையாக இருக்க வேண்டும். புலிபோலப் பாய்ந்தான் எனலாம். நாய் போலப் பாய்ந்தான் எனல் தவறு.

## உவமை கூறத்தோன்றும் நிலைக்களன்கள்

1225. சிறப்பே நலனே காதல் வலியொடு
அந்நாற் பண்பும் நிலைக்களம் என்ப.

சிறப்பு, நலன், காதல், வலி - இவை நான்கின் அடிப்படையில் உவமை கூறுவர். ஒன்றைச் சிறப்பிப்பதற்காக உவமை சொல்லலாம்; கண்ணகி அன்ன கற்புடையாள் - கற்பின் சிறப்பைக் கருதிக் கூறப்பட்டது. அழகு என்பதை 'நலன்' என்றார். நல்லெழில், நற்பண்பு எல்லாம் அடங்கும். புள்ளி வைத்த கோலம் போலும் நீலவானம். காதல் - அன்பு, பாசம், காதலால் கூறுதல் - கிளி போலும் அழகினாள், குயில் போலும் குரலினாள். வலிமை - ஒருவரது வலிமை மிக்க தன்மை. 'அரிமா அன்ன அணங்குடைத் துப்பின்' (சிங்கம் போன்று பிறரை வருத்தும் வலிமையுடைய கரிகாலன் - பட்டினப் பாலை)

## ஒன்றன் இழிவைப் புலப்படுத்தவும் உவமை கூறப்படும்

1226. கிழக்கிடு பொருளொடு ஐந்தும் ஆகும்.

கிழக்கிடு பொருள் - கீழ்ப்படுக்கப்படும் பொருள். இழிவு படுத்துவது. ஒன்றை இழிவு படுத்தவும் உவமை வரும். இதனைச் சேர்த்து உவமை சொல்லத் தூண்டும் சூழல் ஐந்தாகும். 'பன்றி அனைய பகைவர்', 'அரசியலில் அரக்கிகளும் அரக்கர்களும் போன்றவர்களே மிகுதியாயினர்' - இவ்வாறு வருவன இழிவின் மிகுதியைப் புலப்படுத்த வருவன.

## முதலும் சினையும்

1227. முதலும் சினையும் என்று ஆயிரு பொருட்கும்
நுதலிய மரபின் உரியவை உரிய.

முதல் என்பது முழுமைப் பொருள். சினை என்பது அதன் உறுப்பு. மரமும் கிளையும் - முதலும் சினையும். மனிதனும் கையும் - முதலும் சினையும். இவற்றை உவமை கூறும்போது முதலுக்கு முதலை உவமை கூறுவர்; சினைக்குச்

# தொல்காப்பியம்

## மூலமும் கருத்துரையும்

உரைவிளக்கம் :

**தமிழண்ணல்**

**மீனாட்சி புத்தக நிலையம்**

மயூரா வளாகம், 48, தானப்ப முதலி தெரு, மதுரை-625 001

தொலைபேசி: அலுவலகம்: 0452-2345971 வீடு: 2560517

மின் அஞ்சல்: meenakshiputhakam@hotmail.com